

# தூக்குத் தண்டனையும் கடவுளும்

இரா. விஜயகுமாரன்

# தூக்குத் தண்டனையும், கடவுளும்.

**இரா.விஜயகுமாரன்**

This edition first published on April, 2013 by Kumar Publications

R.Vijayakumaran has asserted his right to be identified as the author of this Work in accordance with Indian Copyright Law.

Copyright © R.Vijayakumaran. All rights reserved. No part of this publication may be reproduced, stored in a retrieval system, or transmitted in any form or by any means, electronic, mechanical, photocopying, recording, or otherwise, without the prior permission of the copyright owner.

www.vijayakumaran.in

# பொருளடக்கம்

| | |
|---|---|
| முன்னுரை | 4 |
| தூக்குத் தண்டனை | 8 |
| கடவுள் | 16 |

# முன்னுரை

நம்முடைய கருத்துக்கு மாறுபட்ட கருத்தைப் பிறர் கூறினால் நம்மில் பலர் அந்த கருத்தை உள்வாங்கிக் கொள்வதே இல்லை. ஆரம்பத்திலேயே நிராகரித்துவிடுகின்றார்கள். இதனால்தான் சமுதாயத்தில் ஒரு செயலின் மீது இரண்டு மாறுபட்ட கருத்துக்கள் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கின்றன. முற்று பெறாமல் குறிப்பாகத் தூக்குத் தண்டனை தேவையா, இல்லையா என்பதில் இருந்து கடவுள் உண்டா, இல்லையா என்பது வரையில். இந்த இரண்டு கருத்துகளும் சமுதாயத்தில் பல ஆண்டுகளாக உள்ளன. கடவுள் என்றால் என்ன என்பதைப் புரிந்து கொண்டால் தூக்குத் தண்டனையை ஆதரிக்க மாட்டீர்கள்.

கடவுள் உண்டு என்பவரும், கடவுள் இல்லை என்பவரும் என்னுடைய கருத்தை உள்வாங்கி கொண்டால், கடவுள் உண்டா, இல்லையா என்ற கேள்வியை கேட்கமாட்டீர்கள்.

தூக்குத் தண்டனை வேண்டாம் என்று நான் வலியுறுத்துதலுக்குக் காரணம், ஒரு தனி மனிதனை இந்த தூக்குத் தண்டனையில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காகவோ, அரசியல் லாபத்திற்காகவோ, அல்லது பாதிக்கப்பட்டவர் மீது பரிதாபப்பட்டு, மனிதாபிமான அடிப்படையிலோ அல்ல, அனைவரும் சமம் என்பதை உலகமக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான்.

நாம் ஒரு விஷயத்தை நினைக்க வேண்டும் என்றாலும் அதற்கு இறந்த காலத் தொடர்போ, வெளி உலகத் தொடர்போ இருக்க

வேண்டும். ஒரு தொடர்பும் இல்லாமல் எந்த ஒன்றையும் யாரும் சுயமாகச் சிந்திக்க கூட முடியாது.

நம்முடைய சிந்தனைக்குக் கூட நாம் காரணம் அல்ல என்ற நிலையில், நம்முடைய சிந்தனையின் அடிப்படையில் நாம் செய்கின்ற செயலுக்கு நாம் எப்படிக் காரணமாக முடியும், சிந்தியுங்கள்! ஒரு தனி மனிதனுடைய செயல்கள் அனைத்திற்கும் அவன் வாழ்கின்ற சமுதாயத்தில் இதற்கு முன் ஏற்பட்ட நிகழ்வுகள்தான் காரணம். ஒருவன் நல்லவனாக வாழ்வதற்கும், கெட்டவனாக வாழ்வதற்கும் அவன் காரணம் அல்ல, எனவே அரசு இந்த அறிவியல் உண்மையை மேற்கோள் காட்டி தூக்குத் தண்டனையைத் தடை செய்வதன் மூலம், சமுதாயத்தில் யாரும் யாரையும்விட உயர்ந்தவரும் அல்ல, தாழ்ந்தவரும் அல்ல, அனைவரும் இயற்கையின் முன்பு சமம்தான் என்பதை உறுதியாக்கும். அதனால் யாரும் யாருக்கும் தூக்குத் தண்டனை கொடுக்கத் தகுதியில்லை என்ற அறிவியல் பூர்வமான உண்மை. ஒவ்வொரு மனிதனையும் எளிதில் சென்று அடையும், அப்போது சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வு, மறையும் அனைவரையும் சமமாக என்னும் மனப்பான்மை ஒவ்வொரு மனிதனிடமும் இயல்பாகவே உண்டாகும். இதனால் குற்றம் அற்ற சமுதாயம் உருவாகும் என்பதற்குதான், தூக்குத்தண்டனை தேவை இல்லை என்று வலியுறுத்துகின்றேன்.

நான் எழுத்தாளன் அல்ல சிந்தனையாளன் எனவே என்னுடைய எழுத்துக்கள் வாசகர்களைக் கவரும் வகையில் இருக்காது. சிந்தனையாளன் என்பவன் பூந்தோட்டத்தைப் போன்றவன், எழுத்தாளன் என்பவன் பூக்கடையைப் போன்றவன், பூக்களை மாலையாகத் தொடுத்துக் கொடுப்பவன், தோட்டத்து பூவில்

உயிர் இருப்பது போல் சிந்தனையாளன் எழுத்தில் உயிர் இருக்கும், இதுதான் எழுத்தாளனுக்கும், சிந்தனையாளனுக்கும் உள்ள வேறுபாடு.

எழுத்து என்பது அறிவையும், உணர்வையும் உருவமாற்றம் செய்து காகிதத்தில் அடைக்கும் ஓர் அற்புதமான கருவி. ஒரு எழுத்தாளனின் அறிவும், உணர்வும் வார்த்தையாக மாற்றப்பட்டு எழுத்தாக காகிதத்தில் அடைக்கபடுகின்றன. வாசகர் அதை படிக்கும்போது எழுத்தை வார்த்தையாக மாற்ற வேண்டும், வார்த்தையை அறிவாகவும், உணர்வாகவும் மாற்ற வேண்டும். அப்போது தான் ஒரு எழுத்தாளனின் சிந்தனையும் உணர்வும் வாசகர்களைச் சென்று அடையும்.

"பசி"யின் கொடுமையை எழுத்தாளன் உணர்வுபூர்வமாக எழுதியிருந்தால், "பசி" என்ற வார்த்தையை படிக்கும்போது "பசி"யின் கொடுமையை உணர்ந்தவனால்தான் "பசி" என்ற வார்த்தையை உணர்வாக மாற்ற முடியும். "பசி" அறியாத வாசகனுக்கு அது வெறும் வார்த்தைதான். அது போல் நான் எழுதிய அறிவுபூர்வமான, உணர்வுபூர்வமான கருத்துக்கள் உங்கள் அறிவில் கலக்க வேண்டும், சேரவேண்டும், என்றால் அனைத்து உயிர்களையும் சமமாக மதிப்பவராக நீங்கள் இருக்க வேண்டும்.

நான் எழுதவேண்டும் என்பதற்காக இதை எழுதவில்லை. என்னுடைய கருத்தை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்பதற்காகதான் எழுதியிருக்கின்றேன், எழுதவேண்டும் என்பதற்காக கருத்தைத் தேடுவதற்கும், கருத்தை சொல்லவேண்டும் என்பதற்கு எழுதுவதற்கும் வேறுபாடு உண்டு, மகிழ்வுந்தில் உள்ள நான்கு சக்கரமும் சுற்றினாலும்

முன்சக்கரம் இரண்டும் இயந்திரத்தோடு இணைக்கப்பட்டு சுற்றுவதால் மகிழ்வுந்து நகர்கின்றது, ஆனால் பின்சக்கரம் இயந்திரத்தோடு இணைக்கப்படாததால் மகிழ்வுந்து நகர்வதால் சக்கரம் சுற்றுகின்றது. சக்கரம் சுற்றுவதால் வண்டி நகர்வதற்கும், வண்டி நகர்வதால் சக்கரம் சுற்றுவதற்கும் வேறுபாடு உண்டு. என்னுடைய இந்த எழுத்து வண்டியின் முன்சக்கரத்தைப் போல் இந்த சமுதாயத்தை நல்வழியில் கொண்டு செல்லவேண்டும் என்பதற்காக இந்த புத்தகத்தை எழுதியுள்ளேன்.

**- இரா. விஜயகுமாரன்**

# தூக்குத் தண்டனை

நம்மிடம் உணர்வின் வெளிப்பாடு எப்போது எல்லாம் அதிகமாக உள்ளதோ அப்போது வாழ்கின்றோம் என்று பொருள். அறிவின் வெளிப்பாடு எப்போது அதிகமாக இருக்கின்றதோ அப்போது நாம் இயங்குகின்றோம் என்று பொருள். அதன் அடிப்படையில்தான் மது அருந்துவதை பலர் விரும்புகின்றார்கள். மது அருந்துவதால் செயற்கையான முறையில் உணர்வு அறிவைவிட மிகைப்படும், அப்போது வாழ்க்கையை இன்பமாக வாழ்வது போன்ற பொய்யான தோற்றம் ஏற்படும். உண்மையில் சிறு மூளையின் பாதிப்பால் அறிவின் செயல்பாடு குறைவதால் உணர்வு மிகையாகத் தெரிகின்றது. இரு கோடுகளைப்போல் மது அருந்தியவுடன் அறிவு செயல் இழந்து உணர்வை கட்டுப்படுத்தத் தவறுவதால், உணர்வு விரும்புவதை மனிதன் செய்கின்றான். உணர்வுக்கு அடிமையாகின்றான். இதனால் அவன் தவறுகளை செய்கின்றான்.

ஒரு மனிதனுடைய செயல் அவனுடைய அறிவையும், உணர்வையும் அடிப்படையாகக் கொண்டது, அவனுடைய அறிவும், உணர்வும் அவன் வளர்ந்த சூழல், சமுதாயத்தை அடிப்படையாக கொண்டது. கணினி அச்சுப்பொறி நான்கு வண்ணம் குப்பியை பல விகிதங்களில் கலந்து பல ஆயிரம் வண்ணங்களில் Print செய்வது போல், மனிதர்களாகிய நாமும் அறிவையும், உணர்வையும் பல விகிதங்களில் கலந்து பல செயல்களைச் செய்கின்றோம். குழந்தைகளுடன் நாம் பேசி மகிழும் போது 90% உணர்வையும் 10% அறிவையும்

வெளிப்படுத்துவோம். நுட்பமாக பணிகளை செய்யும்போது 10% உணர்வையும் 90% அறிவையும் வெளிப்படுத்துவோம். நண்பர்களிடம் பழகும்போது 50% அறிவையும், 50% உணர்வையும் வெளிப்படுத்துவோம். இதேபோல் மனைவி, அப்பா, அம்மா, சகோதரர், சகோதரிகளிடம் சூழலுக்கு ஏற்றார்போல் பல விகிதாச்சாரத்தில் உணர்வையும், அறிவையும் பயன்படுத்திப் பழகுவோம். இதனால்தான் நம்முடைய செயல்கள் சூழலுக்கு ஏற்ப மாறுபட்டு இருக்கின்றது.

தூக்குத் தண்டனை நம் நாட்டில் தேவை என்பவர்களும், தேவை இல்லை என்பவர்களில் பலரும் உணர்வையே அதிகம் வெளிபடுத்திக் கருத்து கூறி இருக்கின்றார்கள். தூக்குத் தண்டனை வேண்டும் என்பதற்கோ, வேண்டாம் என்பதற்கோ அறிவியல் பூர்வமான அறிவின் வெளிபாடான கருத்தை யாரும் தெரிவிக்காததால், அரசாங்கமும், நீதித்துறையும் என்ன செய்வது என்று தெரியாமல் தூக்குத் தண்டனை கைதிகளுக்குத் தூக்குத் தண்டனை நிறைவேற்றாமல் காலதாமதம் செய்து வருகின்றது. அது போல் தூக்குத் தண்டனையைத் தடை செய்யவும் தயங்குகின்றது.

தூக்குத் தண்டனை வேண்டாம் என்பவர்களுடைய கருத்து மனிதாபிமான அடிப்படையில், நாகரீக மனிதனின் செயலாக, தூக்குத் தண்டனையைத் தடைசெய்ய வேண்டும் என்பதும், தமிழனுக்காகத் தமிழர்களும், சிங்களருக்காக சிங்களர்களும், குறிப்பிட்ட ஜாதிக்காக அந்த சமுதாய மக்களும் குரல் கொடுத்து வருகின்றார்கள். இது முழுக்க முழுக்க உணர்வுபூர்வமான கருத்து.

மனிதாபிமானம் இல்லாத செயலைச் செய்தவனுக்கு எப்படி மனிதாபிமான அடிப்படையில் தண்டனை கொடுக்காமல் இருக்கமுடியும்? என்பது தூக்குத் தண்டனை வேண்டும் என்பவர்களின் கருத்தாக உள்ளது.

பாதிக்கப்பட்டவர்களும், பாதிப்பை உணர்ந்தவர்க்கும் குற்றம் செய்தவர்களுக்கு தூக்குத் தண்டனை கொடுக்க வேண்டும் என்று கூறுவதில் தவறு இல்லை. அது அவர்களின் உணர்வின் வெளிப்பாடு. இதுதான் எதார்த்தமான வாழ்க்கை. நான் எழுதிய "உன் செயலுக்கு நீ காரணம் அல்ல" என்ற புத்தகத்தில் யாரும் குற்றவாளி அல்ல எனவே யாருக்கும் தண்டனை கொடுக்கக் கூடாது என்று எழுதியிருந்தேன், யாரும் குற்றவாளி அல்ல என்று என் அறிவு ஏற்றுகொண்டாலும், ஒருவர் என்னைத் தாக்கினால், நான் உடனே திருப்பித் தாக்குவேன். இது உயிரின் தன்மை, ஒரு உயிரின் தன்மையும், அரசாங்கத்தின் தன்மையும் ஒன்று அல்ல என்பதை நாம் பிரித்துப் பார்க்கவேண்டும். அரசு என்பது உணர்வற்ற இயந்திரம் போன்றது, இது முழுக்க முழுக்க அறிவின் வழிகாட்டலின்படிதான் நடக்கவேண்டும். அரசு இயந்திரத்தை மனிதன் இயக்குவதால் 5% உணர்வும், 95% அறிவும் கலந்த செயலாக அரசு செயல்கள் இருக்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவரின் உணர்வை நிறைவேற்றுவது அரசின் வேலை அல்ல. நாட்டில் அமைதியையும், ஜனநாயகத்தையும் நிலை நாட்டுவதுதான் அரசின் வேலை.

உணர்வின் மிகுதியால், அறிவின் குறைவால் குற்றவாளி செய்த கொலைக்குத் தண்டனையாக அவருக்கு குற்றவாளியைப் போல் உணர்வின் மிகுதியால், அறிவின் அளுமை குறைவால்

அரசு தூக்குத் தண்டனை கொடுப்பது என்பது எப்படி சரியான செயலாக இருக்க முடியும். அரசும் குற்றவாளி போல் உணர்வின் மிகுதியால் செயல்படுவதால் அரசும் குற்றவாளிதானே?

நம் நாட்டில் ஆண்டுக்குப் பல லட்சம் பேர் எந்த குற்றமும் செய்யாத அப்பாவிகள், விபத்திலும், வன்முறை மற்றும் இயற்கை சீற்றத்தாலும் இறக்கின்றார்கள். இந்த நிலையில் பல கொடிய செயல்களைச் செய்த ஒரு சிலருக்கு மட்டுமே அரசு தூக்குத் தண்டனை கொடுக்கின்றது. இதனால் நாட்டுக்கு எந்த பாதிப்பும் இருக்காது என்று பலரும் எண்ணலாம். ஆனால் அது உண்மை அல்ல, தூக்குத் தண்டனை பெற்றவர்களைக் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இதை நான் எழுதவில்லை, தூக்குத் தண்டனையைத் தடை செய்வதன் மூலம் சமுதாயத்தில் யாரும் தண்டனைக்கு உரியவர் அல்ல, பிறப்பால் யாரும் உயர்ந்தவர், தாழ்ந்தவர் அல்ல. அனைவரும் சமம் என்ற உண்மை உணர்வு அனைவரிடமும் ஏற்பட வேண்டும் என்பதற்காகத்தான், குறிப்பாக அரசியல் தலைவர்கள், உயர்பதவியில் இருக்கும் அதிகாரிகள், நீதித்துறையைச் சார்ந்தவர்கள், செல்வந்தர்கள், கல்வியாளர்கள், திரைப்பட நடிகர், நடிகைகள் பலர் தன்னை கடவுளுக்கு நிகரானவர்கள் என்றே எண்ணுகின்றனர். இதனால் பலரை அவர்கள் அடிமைப்படுத்துகின்றனர். ஆதலால் சமுதாயத்தில் ஏற்றத் தாழ்வு ஏற்படுகின்றது. அனைவரும் சமம் என்பதை அரசு உறுதி செய்யும் வகையில் தூக்குத் தண்டனையைத் தடைசெய்ய வேண்டும். அனைவரும் சமம் என்றால் யாரும் யாருக்கும் தூக்குத் தண்டனைக் கொடுக்க முடியாது. அனைவரும் சமம் என்றால் உயர் பதவிக்கு உயருபவர்கள் யாராக இருந்தாலும்

நாட்டை நிர்வாகம் தான் செய்ய முடியுமே தவிர ஆள முடியாது. அனைவரும் சமம் என்றால் ஒருவரை ஒருவர் ஆளுமை செய்கின்ற மனப்பான்மை, சமுதாயத்தில் மறைந்து போகும். அப்போது அமைதியான சமுதாயம் உருவாகும். அமைதியான சமுதாயம் உருவாக அரசு தூக்குத் தண்டனையை ரத்து செய்து, அனைவரும் சமம் என்பதை மக்களிடம் உறுதி செய்ய வேண்டும்.

ஜனநாயக நாட்டில் அனைவரும் சமம், அனைவரும் இந்நாட்டு மன்னர் என்று சொல்லிக்கொண்டு, சர்வாதிகாரி ஆளும் நாட்டை போல் ஒருவர், ஒருவருக்கு தூக்குத் தண்டனை கொடுப்பது எப்படி ஜனநாயகச் செயலாக இருக்கமுடியும். ஒருவனைப் பார்த்து அவனுக்கு தூக்குத் தண்டனை கொடுங்கள் என்று ஒரு நீதிபதி சொல்வது, ஒரு சர்வதிகாரியின் உச்சகட்ட சர்வதிகார கொடுஞ்செயலுக்கு இணையானது அல்லவா? இது எப்படி உலகிலே தலைசிறந்த ஜனநாயக நாடான நம் நாட்டில் சாத்தியம்? ஆனாலும் இந்தக் கொடுமை நம் நாட்டில் நடந்து கொண்டுதான் இருக்கின்றது.

மனிதனை மனிதன் அடிமைப்படுத்தும் காட்டுமிராண்டிச் செயல்தான் தூக்குத் தண்டனை.

சட்டமும், நீதியும் ஒன்றல்ல இரண்டும் ஒன்றுபோல் தோன்றினாலும் பல இடங்களில் இரண்டும் முரண்பாடாக இருக்கும். சட்டம் நிர்வாகத்தை அடிப்படையாக கொண்டது, நீதி மனசாட்சியை அடிப்படையாக கொண்டது, மனசாட்சி அறிவை அடிப்படையாக கொண்டது.

ஒரு சமுதாயத்தின் அறிவை அளவிட அந்த சமுதாயத்தின் நீதித்துறையின் தீர்ப்புதான் சான்று.

கண்ணுக்கு கண், கைக்குக் கை என்ற நீதி கற்கால மனிதனின் நீதியாக இருந்தது. இது அந்த சமுதாய மக்களின் அறிவைதான் வெளிப்படுத்துகின்றது.

சமுதாயத்தில் அறிவு வளர வளர நீதியும் மாற வேண்டும் என்பதுதான் நீதி.

பல வழக்குகளின் தீர்ப்புகள் சட்டத்தை அடிப்படையாக கொண்டிருக்கும், சில வழக்குகளின் தீர்ப்புகள் நீதியை அடிப்படையாக கொண்டாதாக இருக்கும். எனவே தூக்குத் தண்டனையைத் தடைசெய்ய சட்டத்தில் இடம் இல்லை என்று கூறாமல் உச்சநீதிமன்ற தலைமை நீதி அரசர் தலையிட்டு தூக்குத் தண்டனைக் கைதிகள் அனைவருக்கும் நீதியின் அடிப்படையில் தூக்குத் தண்டனையைத் தடைச்செய்யவேண்டும்

தொடர் வினைத் தத்துவம் தான் இந்த பிரபஞ்சத்தையே ஆளுகின்றது. (அதன் பெயர்தான் விதி) அதனால்தான் நம்முடைய சிந்தனை நமக்குக் கட்டுபட்டு இல்லை என்ற அறிவியல் உண்மையை அரசு புரிந்து கொண்டு அதை உலக மக்களுக்கு தெரியப்படுத்தும் முதல் செயலாக் தூக்குத் தண்டனையைத் தடை செய்தால்,

மனிதர்கள் அனைவரும் மகான்கள் ஆகிவிடுவார்கள்.
நான் என்ற அகங்காரம் நம்மிடம் இருந்து மறைந்துவிடும்.

நான் என்ற அகங்காரம் இல்லை என்றால் உயர்ந்த சாதி தாழ்ந்த சாதி என்ற வேறுபாடு மறைந்துவிடும்.
ஏழை, பணக்காரன் என்ற வேறுபாடு இல்லை.
படித்தவன், படிக்காதவன் என்ற வேறுபாடு இல்லை.
வலியவன், எளியவன் என்ற வேறுபாடு இல்லை என்றால் நாம் அனைவரும் சமம்தானே.
அனைவரும் சமம் என்பதை அனைவரும் புரிந்து கொண்டால் இந்த பூமி சொர்க்க பூமிதானே.

நேற்றைய நிகழ்வுகள்தான் இன்றைக்கு ஆதாரம், இன்றைய நிகழ்வுகள்தான் நாளைக்கு ஆதாரம் என்பது உறுதி. இதற்கு இடையில் கடவுலின் செயலாக இதுவரை உலகில் எந்த நிகழ்வுகளும் நடக்கவில்லை, எனவே புராண காலத்துக் கடவுள் கதை பொய் என்பது உறுதியாகின்றது.

கடவுள் இல்லை என்பதால் மதம் இல்லை.

மதம் இல்லை என்றால், மதக் கலவரம் இல்லை. மூடப்பழக்க வழக்கம்போய்விடும். கடவுள் பெயரால், மதத்தின் பெயரால், யாரும் யாரையும் இனி ஏமாற்ற முடியாது.

விதிதான் கடவுள் என்பதால் இனி இயற்கையைத்தான் நாம் வணங்கி பாதுகாக்க வேண்டும்.

இன்று நாம் நல்லது செய்தால் நாளைக்கு நல்லது நடக்கும் இதற்குப் பெயர்தான் அறிவியல் ஆன்மீகம்.

அறிவியலில் பல சாதனைகள் செய்து வரும் நம் சமுதாயம், வாழ்வியலிலும், அறிவியல் சிந்தனையோடு

செயல்படவேண்டும். நம் சமுதாயத்தின் அறிவுச் சுடர் தூக்குத் தண்டனைக் கயிற்றைச் சுட்டு எரிக்கவேண்டும். அப்போது தான் மனிதர்கள் அனைவரும் சமம் ஆவார்.

# கடவுள்

கடவுளும், உயிரும் ஒன்று, (கடவுள் இல்லை என்பவர் படிப்பதை நிறுத்தி விடாதீர்கள் தொடர்ந்து படியுங்கள் கடவுள் இல்லை.) உயிரை எப்படிப் பார்க்க முடியாதோ அதுபோல் கடவுளையும் யாரும் பார்க்க முடியாது. பார்த்தவரும் இல்லை, கண்களுக்குத் தெரியாத ஒன்றை எப்படிப் பார்க்க முடியும், கடவுளைப் பார்த்தேன் என்று யாராவது சொன்னால் அவர் மனநிலை பாதித்தவர் என்றுதான் பொருள், உயிரையும், கடவுளையும் உணரலாமே தவிர யாருக்கும் காண்பிக்க முடியாது.

நம்முடைய உடலில் உயிர் இருப்பதை நாம் உணர்கின்றோம் ஆனால் பார்க்க முடியவில்லை, அதுபோல்தான் இந்த பிரபஞ்சத்தில் கடவுள் இருப்பதை உணரமுடியும். ஆனால் பார்க்க முடியாது.

நம் உடம்பில் உயிர் இருப்பதை எப்படி உணர்கின்றோம்? நடந்தால், சாப்பிட்டால் குறைந்தப்பச்சம் சுவாசித்தால் நம் உடம்பில் உயிர் இருக்கு என்பதை உணர்கின்றோம். மனிதனாக இருந்தாலும் சரி, மிருகமாக இருந்தாலும் சரி, மரமாக இருந்தாலும் சரி, அது இயங்கினால் அதில் உயிர் இருக்கு என்று பொருள். அது போல்தான் இந்த பிரபஞ்சம் எதுநாள் வரை இயங்குகின்றதோ அந்த நாள் வரை கடவுள் இந்த பிரபஞ்சத்தில் உண்டு என்று பொருள்.

கடவுள் என்ற சொல்லும், உயிர் என்ற சொல்லும் பொருளை குறிக்கவில்லை. பொருளின் செயலைத்தான் குறிக்கின்றது,

தன்னைப் பகுத்தறிவாளன் என்று சொல்லிக்கொள்பவர்கள் பலர் கடவுள் இல்லை என்று சொல்வதும் ஆரோக்கியமாக வாழ்ந்துகொண்டு இருப்பவனைப் பார்த்து உனக்கு உயிரில்லை என்று சொல்வதற்கு சமம். உயிர் என்று ஒன்று இல்லை என்றாலும் இதுதான் உயிர் என்று ஒரு செயலை உணர்கின்றோம், அதுபோல்தான் கடவுள் என்று ஒன்று இல்லை என்றாலும் இயற்கையின் செயலை கடவுளின் செயலாக உணர்கின்றோம் எனவே உயிர் இல்லை ஆனால் இருக்கின்றது என்பதைப் போல் கடவுளும் இல்லை ஆனால் உண்டு இதுதான் அறிவியல் ஆன்மீகம்.

உயிரைப் போற்ற வேண்டும், காக்கவேண்டும் என்றால் உடலின் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும். உடலுக்குத் தனியாக, உயிர்க்குத் தனியாக நாம் சாப்பிடத் தேவை இல்லை. உடலை வளர்த்தால் உயிர் வளரும். அது போல் கடவுளைப் போற்ற வேண்டும், காக்க வேண்டும் என்றால், இந்த பூமியைக் காக்க வேண்டும். இயற்கையைக் காக்க வேண்டும். பூமியில் உள்ள உயிர்கள் அனைத்தையும் தன் உயிர் போல் எண்ண வேண்டும். மனிதர்களை மனிதர்களாக மதிக்க வேண்டும். தர்மம் செய்ய வேண்டும். சத்தியத்தைக் காக்க வேண்டும். அனைவரையும் சமமாக எண்ண வேண்டும். அப்போது இந்த பூமி காக்கப்படும் பூமியில் உள்ள உயிர்கள், இயற்கைகள் காக்கப்பட்டால் கடவுள் நம்முடன் இருப்பதாகப் பொருள். கடவுளை போற்ற வேண்டும் என்பதற்காக சாமி சிலைக்குப் பால் அபிஷேகம் தேவை இல்லை. இது போன்ற செயல்கள் கடவுள் பெயரில் மனிதனை மனிதனே ஏமாற்றும் செயல்கள் இது அனைத்து மதத்தவர்களிடமும் நடக்கின்றது. கடவுளை போற்றுகின்றேன் என்று சொல்லி கொண்டு தன்னை வளர்த்து

கொள்ளாமல் ஏழைக்குக் கஞ்சி ஊற்றினாலே போதும், கடவுள் உங்களைக் காப்பார். அதனால்தான் ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம் என்று முன்னோர்கள் சொல்லி இருக்கின்றார்கள். இயற்கை தான் உடல், விதிதான் உயிர். நல்லது செய்தால் நல்லது நடக்கும், கெட்டது செய்தால் கெட்டது நடக்கும். இது இயற்கையின் விதி இதைத் தான் கடவுள் செயல் என்கின்றோம். எனவே அரசு யாரையும் தண்டிக்கக்கூடாது, பாதுகாக்கவேண்டும்.

தண்ணீரைக் கீழே ஊற்றினால் அது பள்ளத்திற்கு உருண்டு ஓடும், பள்ளத்தைப் பார்த்து தண்ணீர் உருண்டு ஓடுவதால் அதற்குக் கண், கால், உயிர் இருக்கு என்று பொருள் அல்ல, அதில் கடவுள் உண்டு என்று பொருள், விதிதான் இயக்குகின்றது, இதுதான் கடவுளின் செயல். விதி உலகில் உள்ள அனைத்தையும் வழிநடத்துகின்றது. பூமி இயங்கிக் கொண்டு இருக்கும்வரை கடவுள் பூமியில் இருக்கும் உயிரைக் காக்க உடலைக் காப்பது போல், கடவுளைக் காக்க இயற்கையைக் காப்போம் இயற்கைதான் கடவுள். இயற்கையைக் காக்க அனைத்து உயிர்களையும் காப்போம், உயிர்களைக் காக்க அனைவரும் சமம் என்பதைப் புரிந்துகொள்வோம். அனைவரும் சமம் என்பதை உறுதிசெய்யத் தூக்குத் தண்டனையைத் தவிர்ப்போம்.

எல்லாம் கடவுள் செயல் என்று ஞானிகள் சொன்னதற்கும், "உன்செயலுக்கு நீ காணம் அல்ல", என்ற நான் எழுதியதற்கும் எந்த கருத்து வேறுபாடும் இல்லை. ஞானிகள் அன்று கடவுளின் செயல் என்று ஆன்மிகத்தால் உணர்ந்ததை நான் இன்று இயற்கையின் செயலாக அறிவியலால் புரிந்துகொண்டேன்

அப்படி என்றால் கடவுள் என்று எதுவும் இல்லை இயற்கைதான் கடவுள்.

அனைவரும் சமம் என்பதற்க்கும் தனிமனித உரிமை என்பதற்கும் வேறுபாடு உண்டு. நானும் நீங்களும் சமம், ஆனால் உங்கள் சட்டையில் உள்ள பணம் உங்களுக்குத் தான் சொந்தம். இருவரும் சமம் என்பதால் உங்கள் பையில் உள்ளதை நான் எடுக்க எனக்கு உரிமை இல்லை. சமுதாயத்தில் அனைவரும் சமம். ஆனால் தனிமனித உரிமைகள் வேறு, வேறு, தனிமனிதனுடைய உரிமை வரம்புக்குள், அல்லது அவர் குடும்பத்துக்குள் வேறு ஒருவர் அத்து மீறி நுழைய கூடாது. சமுதாயத்தில் அனைவரும் சமம் என்பதற்க்கும், தனிமனித உரிமைக்கும் வேறுபாடு தெரியாமல், சிலர் செயல்படுவதால்தான் ஜாதிச் சண்டைகள், மதக் கலவரங்கள் ஏற்படுகின்றன. எனவே அனைவரும் சமுதாயத்தில்தான் சமம் என்பதை முழுமையாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

விதிதான் கடவுள், கடவுளின் உடல்தான் இயற்கை (பிரபஞ்சம்) இயற்கையின் செயல்தான் விதியின் செயல், விதியின் செயல்தான் கடவுளின் செயல், விதி என்றால் மாறாதது, மாற்றத்துக்கு உட்படாதது. எது நடக்குமோ அது நடந்தே தீரும், என்ற உறுதித் தன்மையை உணர்த்தும் வார்த்தைதான் விதி. விதி என்ற வார்த்தை அறிவை வெளிப்படுத்தும் அறிவியல் வார்த்தை, விதிக்கு நிகராக ஆங்கிலத்தில் வார்த்தை இல்லை. LAW என்ற வார்த்தை சட்டத்தையும், விதியையும் சேர்த்து குறிக்கின்றது. சட்டம் என்பது மனிதனால் உருவாக்கப்பட்டது. விதி என்பது இயற்கையின் செயல், Fate என்றால் துரதிஷ்டம் என்றுதான் பொருள் எனவே விதி என்ற அறிவை

ஆங்கிலேயர்கள் முற்காலத்தில் பெற்றிருக்கவில்லை என்றுதான் பொருள். விதி என்ற வார்த்தை தமிழனின் அறிவை உலகுக்குக் பறைசாற்றும் சொல். பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தமிழர்கள் இயற்கையை ஆராய்ந்து அதன்படி வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதற்கு விதி என்ற வார்த்தையே சான்று, விதியை மீறி ஒரு அணுவும் அசையாது, இந்த பிரபஞ்சத்தில் எது நடந்தாலும் அனைத்தும் விதிக்கு உட்பட்டுத்தான் நடக்கும் என்பது உறுதி. விதியைத் தமிழர் உணர்ந்ததால்தான் இயற்கையையும் பிற உயிர்களையும், உழைப்பாளிகளையும் தெய்வமாக வணங்குகின்றான். அதற்குச் சான்றுதான் தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு அறிவுபூர்வமாக இயற்கையை கடவுளாக வணங்கிய முதல் சமுதாயம் நம் தமிழ் சமுதாயம். அது போல் காதல், அன்பு, பாசம் என்ற வார்த்தைகள் நமக்கு உணர்வை உணர்த்தும் வார்த்தைகள், மனைவியிடம் அன்பை வெளிப்படுத்தக் காதல் என்ற வார்த்தையும், நண்பர்களிடம் நட்பை வெளிப்படுத்த அன்பு என்ற வார்த்தையும், அம்மா, அப்பா மற்றும் உறவினர்களிடம் உறவை மேம்படுத்த பாசம் என்ற வார்த்தையையும் நம் தமிழ் மொழியில் உள்ளன. இந்த வார்த்தைகளைப் பயன்படுத்தி நம் உணர்வைத் தெளிவாக வெளிப்படுத்த முடியும். நம் முன்னோர்கள் உணர்வு பூர்வமாக வாழ்ந்து இருந்ததால் தான் இந்த வார்த்தைகளை கண்டுபிடித்து பயன்படுத்தி இருக்கின்றார்கள் என்பது நமக்கு தெளிவுபடுத்துகின்றது. ஆனால் ஆங்கிலத்தில் LOVE என்ற ஒரு வார்த்தைதான் உள்ளது. எனவே அவர்களால் தமிழர்களுக்கு இணையாக உணர்வை வெளிப்படுத்தி வாழவில்லை என்றுதான் தோன்றுகின்றது.

அம்மா, அப்பா என்ற வார்த்தைகள் உணர்வையும், அறிவையும் வெளிப்படுத்தும் வார்த்தைகள் அம்மா, அப்பா என்பது வார்த்தை அல்ல. அது உயிரின் ஓசை, அதனால்தான் உயிருக்கு ஆதாரமாக இருந்த அம்மா, அப்பாவுக்கு இந்த பெயர்களை நம்முன்னோர்கள் வைத்து உள்ளார்கள் என்று தோன்றுகின்றது. இது போல் மற்ற உறவுகளையும் துள்ளிமாகக் குறிப்பிட அண்ணன், தம்பியில் ஆரம்பித்து மூன்றாவது தலைமுறையில் உள்ள கொள்ளுத் தாத்தா வரைக்கும் உறவுகளைக் குறிப்பிட்டு அழைக்கத் தமிழில் வார்த்தைகள் உண்டு. இந்த உறவு வார்த்தைகள் உலகுக்கு பறைசாற்றுவது என்னவென்றால் தமிழர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்து உறவைக் காத்து குடும்பம் நாகரிகத்துடன் வாழ்ந்ததற்கு ஆதாரமாக உள்ளது. ஆனால் ஆங்கிலத்தில் முக்கிய உறவுகளைத் தவிர துள்ளியமாக அனைத்து உறவையும் குறிக்க அவர்களிடம் வார்த்தைகள் இல்லை. இது அவர்கள் குடும்பம் என்ற நாகரிகத்தோடு வாழவில்லை என்பதை நமக்குத் தெளிவுபடுத்துகின்றது.

அதுபோல் கற்பு என்ற வார்த்தையும் ஆங்கிலத்தில் இல்லை நம் தமிழ் சமுதாயம் பலஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்து ஒருவனுக்கு ஒருத்தி என்ற மேன்மையான ஒழுக்கத்தோடும், நாகரிகத்தோடும் வாழ்ந்து இருக்கிறார்கள் என்பதற்கு நம் தமிழ் மொழியின் வார்த்தைகளே சான்றாக உள்ளது.

நம் தமிழ் மொழியின் வார்த்தையைப் பார்க்கும் போது, தமிழர்கள் தான் இந்த உலகத்துக்கு அறிவையும், உணர்வையும், ஒழுக்கத்தையும் கற்றுகொடுத்து இருக்கும் முதன் முதல் சமுதாயமாக இருக்கும் என்று தோன்றுகின்றது.

அப்படிப்பட்ட சிறந்த தமிழ் மொழியை தாய் மொழியாக பெற நான் என்ன தவம் செய்தேனோ!

இன்று உலகமே பல அறிவியல் வளர்ச்சி கண்ட நிலையில், அன்று உலகத்திற்கே ஆன்மீக அறிவைத் கொடுத்த தமிழன் இன்று மூடநம்பிக்கையில் மூடபழக்கங்களில் மூழ்கடிக்கப்பட்டு இருக்கிறான். விதி என்ற அறிவியல் தத்துவத்தை அறிந்தவன் மூடப்பழக்கத்தை நம்பமாட்டான், விதி அறிவியல் வார்த்தை, சோதிடம் ஏமாற்று வார்த்தை வைரக்கல்லைக் குப்பை மறைத்துவிட்டது போல் பல மூடநம்பிக்கை வார்த்தைகள் நம் அறிவியல் வார்த்தையை அழுக்காக்கிவிட்டன விதி என்றால் துரதிஷ்டம் என்று பொருள் அல்ல, விதி என்ற வார்த்தைக்கு நிகர் வார்த்தைகள் இல்லை, இந்த நிலையில் விதிவிலக்கு என்ற வார்த்தை தவறான வார்த்தை விதி என்றால் மாற்றத்திற்கு உட்படாதது என்று பொருள் மாறாத ஒன்றில் எப்படி மாற்றம் இருக்கும், எனவே மனிதன் உருவாக்கிய சட்டத்தில் விலக்கு என்று சொல்லலாமே தவிர விதிவிலக்கு என்று சொல்வது பொருளற்ற வார்த்தை. விதியிலிருந்து விலக்கு மனிதனால் எப்படி கொடுக்கமுடியும் விதியோடு விலக்கு சேர்ந்து விதியை அழித்ததுபோல் ஆன்மீகத்தோடு மூடநம்பிக்கைகள், வாஸ்த்துகள், சோதிடம், பரிகாரம் மற்றும் மதம் என்று இதுபோல் பல சேர்ந்து ஆன்மீகத்தை அழித்துவிட்டன.

விதி என்ற அறிவியல் உண்மையை முதலில் அறிந்தவன் தமிழன் என்பதைப் போல், சுயமாக நாம் எதையும் சிந்திக்க முடியாது என்ற அறிவியல் உண்மையை முதலில் அறிந்ததால், உலகில் அனைவரும் சமம் ஆவார். யாரும் தண்டனைக்கு

உரியவர் அல்ல என்பதை உலகிற்குக் தெரியபடுத்தும் முதல் நாடு இந்தியா என்பதை உலகம் அறியத் தூக்குத் தண்டனையை நீதித்துறை கண்டிப்பாக உடனே தடை செய்ய வேண்டும்.